2013 மே 13]

483—

ஆரம்ப சுகாதார நிலையம்

***33158—திரு. ஏ.ஏ. கருப்பசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அவினாசி தொகுதி, ஆலத்தூர் ஊராட்சி, ஆலத்தூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருப்பூர் மாவட்டம், அவினாசி ஊராட்சி ஒன்றியம், ஆலத்தூரில் ஒரு துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அவினாசி ஊராட்சி ஒன்றியத்தில் சேவூர், நம்பியாம்பாளையம், துலுக்கமுத்தூர் ஆகிய 3 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களும், அவினாசி, திருமுருகன்பூண்டி ஆகிய 2 இடங்களில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. சேவூர் ஆரம்ப சுகாதார நிலையம் கடந்த ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு சீரோடும் சிறப்போடும் செயல்பட்டு வருகிறது. அவினாசி ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் ஒரு தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், குறைவான மக்கள் தொகை கொண்ட ஆலத்தூரில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் தற்சமயம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி அவர்கள்.*

திரு. ஏ.ஏ. கருப்பசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறைவன் தந்த கொடை, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவி, நாளைய பாரதப் பிரதமர், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்தில் 7 முறை நான் பேச வாய்ப்புத் தந்து, நான் வைத்த கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தந்துள்ள மாண்புமிகு*

[2013 மே 13

தமிழ்நாடு முதலமைச்சர், இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை பணிந்து வணங்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அவினாசி தொகுதிக்குட்பட்ட ஆலத்தூரில் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாமல், ஆலத்தூர் மற்றும் அதன் அருகில் உள்ள பொங்கலூர், கானூர், மங்கரசு வலையபாளையம், தண்டுக்காரம்பாளையம் ஆகிய 5 கிராமங்களை உள்ளடக்கி 30 ஆயிரம் மக்கள் சிரமப்பட்டு வருகின்றார்கள். புற நோயாளிகள், உள்நோயாளிகள், கர்ப்பிணிப் பெண்கள் தங்கள் மருத்துவ சிகிச்சைக்காக அவினாசி அரசு மருத்துவமனைக்கு செல்லவேண்டுமானால் 22 கிலோ மீட்டர் செல்லவேண்டும். சேவூர் ஆரம்ப சுகாதார நிலையம் செல்ல வேண்டியிருந்தால் 13 கிலோ மீட்டர் செல்லவேண்டும். நம்பியாம்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையம் செல்ல வேண்டுமானால் 15 கிலோ மீட்டர் செல்லவேண்டும். துலுக்கமுத்தூர் ஆரம்ப சுகாதார நிலையம் செல்ல வேண்டியிருந்தால் 18 கிலோ மீட்டர் செல்ல வேண்டும். புளியம்பட்டி அரசு மருத்துவமனை செல்ல வேண்டுமானால் 9 கிலோ மீட்டர் செல்லவேண்டும். ஆலத்தூரில் சுகாதார நிலையம் இல்லாததால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவினாசி அருகில் உள்ள ஆலத்தூரில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க முன்வருவார்களா என அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தற்பொழுது 1,614 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட வேண்டுமென்றால், சமவெளிப் பகுதியாக இருந்தால் 30 ஆயிரம் மக்கள்தொகையும், மலைப் பகுதியாக இருந்தால் 20 ஆயிரம் மக்கள்தொகையும் இருத்தல் வேண்டும். மேலும், இரு சுகாதார நிலையங்களுக்கும் இடையே குறைந்தபட்சம் 8 கிலோ மீட்டர் இடைவெளி இருத்தல்வேண்டும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் புதிய சுகாதார நிலையம் அமைக்கக் கோரும் ஆலத்தூர் கிராமத்தின் மொத்த மக்கள்தொகை 4,856 மட்டுமே எனத் தெரிகிறது. இக்கிராமத்தில், ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

2013 மே 13]

இக்கிராமத்திலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் புளியம்பட்டியில் தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும், 13 கிலோ மீட்டர் தொலைவில் சேவூர் தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும், 10 கிலோ மீட்டர் தொலைவில் அனைத்து வசதிகளையும் கொண்ட அன்னூர் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருகின்றன. ஆலத்தூரில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வாய்ப்பு உள்ளதா என்று துறையின் சார்பாக தனிக் கவனம் செலுத்தி மீண்டும் ஆய்வு செய்து, அந்த ஆய்வு அறிக்கையிலே மக்கள்தொகை மற்றும் விதிகளுக்கு உட்பட்டு வருமேயானால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அதன் பின்னர் முடிவு செய்யலாம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி அவர்கள்.

திரு. ஏ.ஏ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலத்தூர் கிராமத்தில் 4,539 பேரும், பொங்கலூர் கிராமத்தில் 3,635 பேரும், கானூர் கிராமத்தில் 3,956 பேரும், மங்கரசு வலையாபாளையம் கிராமத்தில் 3,806 பேரும், தண்டுக்காரம்பாளையம் கிராமத்தில் 4,492 பேரும், கிட்டத்தட்ட 24,000 பேர் வசித்து வருகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, ஆலத்தூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டுகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் தொடர்ந்து எனக்கு 7 முறை வாய்ப்புத் தந்து, கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]